பள்ளிகளில், வசதி உள்ளவர்களிடம், இன்கம்டாக்ஸ் கொடுக்கக் கூடியவர்கள், இவர்களிடம் சம்பளம் வசூல் செய்தால் அதில் தவறு என்ன இருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது ஒரு கொள்கை, ஒரு பள்ளியிலே வசதியுள்ளவர்கள், வசதியில்லாதவர்கள் என்று பாகுபாடு செய்வது நல்லதல்ல.

பெண்கள் பள்ளிகள்

*** 106 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பெண்கள் பள்ளிகளில் ஆண்களை ஆசிரியர்களாக நியமிக்கக்கூடாது என இம்மாநில அரசாங்கம் உத்தரவு ஏதேனும் பிறப்பித்திருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அப்படிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கக் காரணமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No.

(b) Does not arise.

புலவர் கா. கோவிந்தன் : ஆரம்பப் பள்ளிகளிலே போடுகின்ற ஆசிரியர்கள் அத்தனை பேரும் பெண்களாக இருக்கவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு போடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுதான் என்னுடைய கருத்து.

ஆட்சி மொழி (சட்டக்) கமிஷன்

*** 107 கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சட்டச் சொற்களை தமிழில் தொகுப்பதற்கு ஒரு Legislative Commission ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அதன் விவரம் என்ன ?

(உ) இந்தக் குழுவிற்கும் Central Legislative Commission -க்கும் தொடர்புண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have constituted an Official Language (Legislative) Commission for this State.

(b) The Commission consists of the officiating Chief Justice Sri M. Anantanarayanan, I.C.S., as Chairman and six other members, viz.—

SRI S. Venkateswaran, I.C.S., (Retd.),
DR. M. Varadarajan,
SRI K. Appadurai,
Secretary to Government, Law Department,
Director of Tamil Development, and
Director of Legal Studies.

5th February 1966]

The functions of the Commission will be as follows :—

(i) To finalise and publish the glossary of legal terms hitherto undertaken by the Committee of Direction for compiling a glossary of legal terms.

(ii) Translation of State Acts and Ordinances and the Rules made thereunder into Tamil.

(iii) To scrutinise the translation into Hindi of Central laws and the glossary of legal terms prepared by the Central Official Language (Legislative) Commission for being adopted for use in all the regional languages.

(iv) To undertake translation of Central Acts, Ordinances, Rules, notifications, etc., if such work is to be entrusted to the State machinery.

(v) Any other work which may be entrusted to the Commission by the Government from time to time.

(c) Yes. The Commission will be a complementary organisation to the Central Official Language (Legislative) Commission.

திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, இந்தக் குழு சட்டச் சொற்களை தொகுக்கும்போது, மத்திய சர்க்காரிலே அமைக்கப்பட்டிருக்கின்ற குழுவுடன் ஆலோசிக்கவேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? மத்திய சர்க்கார் குழு, அகில இந்தியா முழுவதும் சட்ட சொற்கள் ஒரே மாதிரியாக அமைய வேண்டுமென்று மாகாணக் குழுவிடம் வற்புறுத்தியதா? இதைப் பற்றி அரசாங்கத்தினுடைய கருத்து என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் குழு அமைக்கப்படுவதற்கு முன்பிருந்தே மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தோடு கலந்தாலோசித்துக்கொண்டு வருகிறது. அவ்வாறு முடிவாகச் சட்டச்சொற்கள் அமைக்கும்பொழுது இந்த மாநிலத்தையும் கலந்து கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. சா. கணேசன் : இந்தமாதிரி சட்டச் சொற்களை அமைக்கும்பொழுது பழந்தமிழ் இலக்கியங்கள், பழங்கால வழக்குகள் இவற்றையெல்லாம் மேற்கொள்வதுடன், மொழி மரபுக்கும், வழக்குக்கும் ஒவ்வாததாகவும் அதேநேரத்தில் புரியாமல் வழக்கிற்கு ஒவ்வாத அல்லது வழக்கொழிந்த சொற்களை மேற்கொள்ளாமல் இருக்கின்ற செவ்விய முறை கையாளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அங்கத்தினர் கூறுவது செவ்விய கருத்து. இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் குழு சட்டச் சொற்கள் ஹிந்தி மொழியிலே இருக்கவேண்டுமென்றும், ஹிந்திச் சொற்களைத் தமிழில் மாற்றியமைக்கவேண்டுமென்றும் வற்புறுத்தியதா?

[5th February 1966

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஹிந்தி மொழியாக இருந்தாலும். எந்த மொழியாக இருந்தாலும், பொதுவாக அந்தச் சொல் கையாளக்கூடிய சொல்லாகவும், புரியக்கூடிய சொல்லாகவும். மற்றவர்கள் சுலபமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய சொல்லாகவும் இருக்கவேண்டும். அதுதான் அடிப்படையான கருத்து.

திரு. செ. மாதவன்: மத்திய சர்க்கார் இயற்றக் கூடிய சட்டங்கள் ஹிந்தியிலே இருந்தால் அதையும் தமிழிலே மொழிபெயர்ப்பதற்கு இந்தக் குழுவுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதையும் தமிழிலே மொழி பெயர்ப்பதாக இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவரவர்களே, சட்ட நுணுக்கங்களை ஆராயும்பொழுது ஆங்கிலத்திலிருந்து, அல்லது ஹிந்தியிலிருந்து டிரான்ஸ்லேட் பண்ணும்பொழுது தமிழிலே மொழி பெயர்க்க வேண்டும். ஆகவே, தமிழிலே கோர்ட் நடவடிக்ன்ககள், சட்டங்கள் எல்லாம் செய்யமுடியும் என்று சர்க்கார் நம்புகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தமிழிலே செய்வதற்கு புதிய நம்பிக்கை வேண்டியதில்லை. எப்பொழுதும் அந்த நம்பிக்கை உள்ளது. உயர்நீதி மன்றத்தில் ஜட்ஜ்மெண்ட் தமிழில் எழுதியிருக்கிறார்கள். கீழ்க்கோர்ட்டுகள் தமிழிலே நடக்கிறது. இதைக் கொள்கையளவிலே வைத்துக்கொண்டு நீதி தவறக்கூடிய அளவிலே எதையும் செய்துவிடக்கூடாது. ஏதாவது ஒரு வார்த்தை சொல்லி அதை இன்னொரு வார்த்தை என்று வைத்துக் கொண்டு, பிறகு அதைப்பற்றி அப்பீல் செய்து இப்படியெல்லாம் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு தமிழ் எவ்வளவுக்கு உபயோகப்படுத்த வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன்: மொழிக் குழு உயர்நீதி மன்ற அளவில் அல்லது நீதி மன்ற அளவில், இந்தியில்தான் இறுதியாக அந்த கோர்ட் லாங்க்வேஜ் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறதா? நம்முடைய மொழிக் குழு சட்டத்தைத் தமிழில் மொழி பெயர்க்கும்போது நம்முடைய உயர் நீதி மன்றங்களிலும் மற்ற நீதி மன்றங்களிலும் தமிழ்தான் கோர்ட் லாங்குவேஜ் என்று நிர்ணயிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: மற்ற நீதி மன்றங்களைப் பற்றி நான் சொல்ல முடியாது. உயர்நீதி மன்றம் இருக்கிறது; மற்ற கோர்ட்டுகள் இருக்கின்றன. மத்திய அரசாங்கம் என்ன முடிவு செய்தாலும் நம்முடைய நீதி மன்றங்களைப் பொறுத்தவரை ஆங்கிலத்திற்குப் பதிலாக வேறு மொழி வருவதாக இருந்தால் அது தமிழ் மொழியாகத்தான் இருக்குமே தவிர, இந்தியாக இருக்காது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: கீழ்க் கோர்ட்டுகளில் எல்லாம் அநேகமாக நடவடிக்கைகள் தமிழில் நடைபெறுவதாகத் தெரிவித்தார்கள். ஏழை விவசாயிகளுக்கு ரெண்ட் கோர்ட்டிலும்

ரெவின்யூ கோர்ட்டிலும் கேஸ்கள் இருக்கின்றன. அந்தக் கோர்ட்டுகளில் காரியங்கள் தற்போதும் ஆங்கிலத்தில்தான் நடக்கிறது. அதைத் தமிழில் நடத்த ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வழக்கறிஞர்கள் உதவி இல்லாமல் கட்சிக்காரர்கள் எழுதிக் கொடுப்பதாக இருந்தால் தமிழில் இருப்பதற்கு ஆட்சேபம் இல்லை. வழக்கறிஞர்கள் பக்குவம் அடையாத நிலையிலே அவர்கள் தமிழிலே வழக்குகளை பற்றி எழுத வேண்டுமென்று சொன்னால் கட்சிக்காரர்கள்தான் பாதிக்கப்படுவார்கள்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : முதலமைச்சர் அவர்கள், பண்டைக் காலத்தில் தமிழில் ஜட்ஜ்மெண்டு எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பண்டைகாலத்திலேயே தமிழில் ஜட்ஜ்மெண்ட் எழுதியிருக்கும்போது இப்போது அதிலே என்ன தடை இருக்கிறது ? ஏன் சர்க்கார் தயங்குகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சர்க்காருக்குத் தயக்கம் ஒன்றும் இல்லை. கோர்ட் வேறு; சர்க்கார் வேறு, இது சர்க்கார் உத்தரவு போடுகிற விஷயம் அல்ல. பண்டைக்காலத்தில் உயர் நீதி மன்றத் தீர்ப்புகள் தமிழில் இருந்திருக்கின்றன என்று சொன்னேன். ஆனால் இப்போது எவ்வளவோ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது; புதிய புதிய சட்டங்கள் வருகின்றன. அதற்கேற்ற வகையில் பக்குவம் அடைந்தால் அதற்குப் பிறகு தமிழில் நடத்தலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : சட்டச் சொற்களை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கும்போது மக்களுக்குப் புரியும் பாஷையிலே—கலெக்டர் என்பதற்குத் தண்டல் நாயகம், போலீஸ் ஸ்டேஷன் என்பதற்குக் காவலர் நிலையம் என்பன போன்ற புரியாத சொற்களைச் சேர்க்காமல் புரியும்படியான சொற்களைச் சேர்ப்பது பற்றிப் பரிசிலனை செய்யப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுவும் கவனிக்கப்பட வேண்டிய விஷயந்தான்.

திரு. செ. மாதவன் : மாவட்டங்களில் இருக்கக்கூடிய நீதி மன்றங்களில் மனுக்கள், பிராதுகள் ஆகியவற்றைத் தமிழில் எழுதுகின்றனர். ஆனால் டெபோசிஷன்ஸ் கேட்கும்போது தமிழில் கேள்வி கேட்டு ஆங்கிலத்தில் எழுதப்படுகிறது. இதனால் நீதிபதி தவறு செய்ய வாய்ப்பு இருப்பதால் டெபோசிஷன்ஸைத் தமிழிலே எழுதலாம் என்று அனுமதிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது தமிழிலும் இருக்கலாம்; ஆங்கிலத்திலும் இருக்கலாம்; நீதி தவறக் கூடாது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : ரென்ட் கோர்ட்டிலும், ரெவின்யூ கோர்ட்டிலும் அதிகாரிகள் வக்கீலை வைத்து எழுதிக் கொடு என்கிறார்கள். ஏழை விவசாயிகள் ஆங்கிலத்தில் எழுத வேண்டுமென்ற காரணத்தால் வக்கீலைத் தேடிப் போகிறார்கள்.

[5th February 1966

தமிழில் கொடுக்கலாம் என்று சொன்னால் அவர்களே எழுதிக் கொடுத்து விட முடியும். ஆகவே, அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தமிழில் எழுதிக் கொடுத்தால் அதிகாரிகள், அது ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென்று சொல்வது தவறு, அப்படிச் சொல்லமாட்டார்கள். அப்படிச் சொல்வதாக இருந்தால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதன் மேல் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

மாணவர் விடுதியில் தொலை பேசி

*108. **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை, சைதாப்பேட்டையிலுள்ள எம். சி. ராஜா ஹரிஜன மாணவர்கள் தங்கும் விடுதியில் தொலை பேசி வைக்கும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அது எப்போது அமல் நடத்தப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) இந்த மாணவர் விடுதி மாம்பலம் பகுதியில் அமைந்துள்ளது. மாம்பலம் எக்ஸ்சேஞ் பகுதியில் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் முழுச் சக்தியுடன் செயல்பட்டு வருகிறது என்றும், இந்த எக்ஸ்சேஞ்சை விரிவுபடுத்தப்படும்வரை புது லைன்களை அமைக்க முடியாது என்றும் டெலிபோன் துறை தெரிவித்துள்ளது. எக்ஸ்சேஞ்ச் விரிவுபடுத்தப்பட்டவுடன், இது குறித்துடெலிபோன் துறையுடன் கடிதப் போக்குவரத்து நடைபெறும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தனிப்பட்ட விடுகளுக்குக் கூட டெலிபோன் லைன் கேட்டால் உடனே கொடுத்து விடுகிறார்கள். பல கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் தங்கியிருக்கும் ஹாஸ்டலில் அவர்கள் அவசரமாக செய்தி கொடுக்கக்கூடிய நிலைமைகள் நிறைய ஏற்படும். அந்த நிலையை வைத்தாவது உடனடியாக டெலிபோன் வசதி செய்து கொடுக்க முன் வருவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தாமதத்திற்கு விளக்கம் கூறியிருக்கிறேன்.

தங்கப் பத்திரம்

*109. **கேள்வி.—திரு. து. ப. அழக முத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தானத்தில் தங்கப் பத்திரத்தில் முதலீடு செய்ய தங்கம் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், எவ்வளவு தங்கம் கொடுக்கப்பட்டது ?